
தீர்க்கதரிசன புத்தகங்களை விளக்குதல்
பாடம் 8 நவம்பர் 21, 2026

"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல் லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்."

(லூக்கா 24:27)



எம்மாவு செல்லும் வழியில், இயேசு தனது சீடர்கள் இருவருக்கு வேதாகம பாடம் நடத்தினார். அதன் முழு விவரமும் நமக்கு தெரியாது, ஆனால், அந்த சீடர்களின் இதயங்களை எரிய செய்த அந்த வலிமைமிக்க வேதாகம பாடத்தை அவர் எந்த முறையில் வழங்கினார் என்பது நமக்கு தெரியும்.



திருமறையை ஆய்வு செய்வதற்கும் அதன் செய்தியை பகிர்ந்து கொள்வதற்கும் மிக சிறந்த வழி எது?

இந்த பாடத்தில், வேதத்தை படிப்பதற்கான சில பயனுள்ள முறைகளை நாம் மறுஆய்வு செய்வோம், இவை, அதன் செய்தியை உண்மையாகவும் திறம்படவும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள நமக்கு உதவும்.



- வேதத்தைக் கொண்டு வேதத்திற்கு விளக்கம் அளித்தல்
- வரலாற்று சூழல்
- கலாச்சார சூழல்
- இலக்கிய சூழல்
- வாக்கியத்தின் பொருளை கண்டறிதல்
- கருப்பொருள் சார்ந்த வேத ஆய்வு

# வேதத்தைக் கொண்டு வேதத்திற்கு விளக்கம் அளித்தல்

"கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்" (ஏசாயா 28:10)

வேதத்திற்கு வேதமே சிறந்த விளக்கவுரை ஆகும்.



## அதன் சொந்த வாக்கியத்திலேயே பொருள் கொள்ளப்பட்டது

- உதாரணமாக, தானியேல் தான் கண்ட தரிசனத்தின் பொருளை விளக்கும்போது, தான் கண்ட மிருகங்கள் என்பவை ராஜ்யங்களே என்று கூறுகிறார்(தானி. 7:3, 17)



## மற்றொரு தீர்க்கதரிசியால் விளக்கப்பட்டது

- எரேமியாவின் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிட்டிருந்த 70 ஆண்டுகளின் பொருளை எஸ்றா விளக்கினார் (எரே. 25:11-12; 2நாளா. 36:22-23)



## புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டிற்கு விளக்கம் அளிக்கிறது

- இயேசுவின் பிறப்பு ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக விளக்கினார் (ஏசா 7:14; மத் 1:22-23)



# வேதத்தைக் கொண்டு வேதத்திற்கு விளக்கம் அளித்தல்

இயேசு பழைய ஏற்பாட்டை விளக்கியது மட்டுமின்றி, அதன் நேரடிப் பொருளை கடந்து, அதற்குரிய உண்மையான அர்த்தத்தையும் வழங்கினார்



| பழைய ஏற்பாடு | கேள்விப்பட்டிருக்கிறீர்கள்... | புதிய ஏற்பாடு | நான் உங்களுக்கு சொல்லுகிறேன்... |
|---|---|---|---|
| யாத் 20:13 | கொலை செய்யாதிருப்பாயாக | மத்தேயு 5:21-22 | நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளாதே |
| யாத் 20:14 | விபசாரஞ் செய்யாதிருப்பாயாக | மத்தேயு 5:27-28 | ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்காதே |
| உபா 24:1 | தள்ளுதற்சீட்டை மனைவிக்கு கொடுப்பது | மத்தேயு 5:31-32 | வேசித்தன முகாந்தரத்துக்காக மாத்திரமே மனைவியைத் தள்ளிவிட வேண்டும் |
| லேவி 19:12 | பொய்யாணையிடுதல் | மத்தேயு 5:33-34 | பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; |
| லேவி 24:20 | கண்ணுக்கு கண் | மத்தேயு 5:38-39 | தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; |
| லேவி 19:18 | உனக்கடுத்தவனைச் சிநேகிப்பாயாக | மத்தேயு 5:43-44 | உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; |



# வரலாற்று சூழல்

"அங்கே இனி அற்ப ஆயுசுள்ளபாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோசபிக்கப்படுவான்." (ஏசாயா 65:20)

புதிய பூமியில் குழந்தைகள் இறப்பார்களா, அங்கே பாவிகள் இருப்பார்களா? (ஏசாயா 65:17-20)

புதிய ஏற்பாட்டின் இறுதிக்கால தீர்க்கதரிசனங்களின் பின்னணியில் நோக்கும்போது, ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அதிர்ச்சியளிப்பதாக இருப்பது மட்டுமன்றி, முரண்பாடானதாகவும் உள்ளது (வெளி. 21:1-4).

ஏசாயாவின் வரலாற்று சூழலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் வரலாற்று சூழலும் வெவ்வேறானவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இஸ்ரவேலர் மேசியாவை ஏற்றுக்கொண்ட காலத்தை பற்றியே ஏசாயா பேசினார். ஆனால், யோவானின் காலத்தில், இஸ்ரவேலர் மேசியாவை நிராகரித்திருந்தனர். சூழல் மாறியிருந்தது.

இஸ்ரவேல் மேசியாவை ஏற்றுக்கொண்டிருந்தால், ஒரு முக்கிய மாற்றம் நிகழ்ந்திருக்கும்: பூமியும் மனிதக்குலமும் மீட்கப்பட்டு உருமாறும் செயல்முறை படிப்படியாக தொடங்கியிருக்கும். இறைபக்தியுள்ள மனிதர்கள் மரங்களைப் போல நீண்ட காலம் வாழ்ந்திருப்பார்கள். (ஏசாயா 65:22), மேலும், பரிசுத்த தேசத்தில் விலங்குகளின் ஆக்ரோஷமான குணம் குறைந்திருக்கும் (ஏசாயா 65:25). இறுதியில், இறந்தவர்கள் உயிர்தெழுப்பப்படுவார்கள், மரணம் இல்லாமற்போகும் (ஏசா. 26:19; 25:8). ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களில் இந்த இறுதிப் பகுதி நிறைவேறும். ஏனெனில், இது இஸ்ரவேலின் முடிவை சார்ந்ததல்ல.



# கலாச்சார சூழல்

"அவர்கள் ஒரு ஜனத்தை விட்டு மறுஜனத்தண்டைக்கும், ஒரு ராஜ்யத்தைவிட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள்." (1 கொரிந்தியர் 16:20)

ரோமானிய பேரரசில், இன்று பல இடங்களில் இருப்பது போலவே, ஒருவரை ஒருவர் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்துவது வழக்கமான ஒன்றாக இருந்தது. அந்த கலாச்சார சூழலில், பவுலின் அறிவுரை பொருத்தமானதாகவே இருந்தது (1 கொரி. 16:20).





இருப்பினும், உதாரணமாக – ஜப்பானிய கலாச்சாரத்தில் – பொதுவெளியின் உடல் ரீதியான தொடுதல் பொதுவாக தவிர்க்கப்படுகிறது, எனவே, இது பெரும்பாலான மக்களிடையே வியப்பையோ, விசித்திரமான உணர்வையோ அல்லது அசௌகரியத்தையோ ஏற்படுத்துகிறது.



ஆங்கிலோ-சாக்சன் வாழ்த்து



தாய்லாந்து வாழ்த்து



திபெத்திய வாழ்த்து



நியுசிலாந்து வாழ்த்து

அந்த கலாச்சார சூழலில், பவுலின் அறிவுரையை பின்பற்றுவது மக்களிடையே நிராகரிப்பை ஏற்படுத்தும் என்பதால் அவரது அறிவுரையை அந்த சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்து, அதன் சாராசம்த்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



நாம் ஜப்பானில் இருந்தாலும் சரி, உலகின் வேறெந்த பகுதியில் இருந்தாலும் சரி, அந்தந்த கலாச்சாரத்திற்கு பொருத்தமான வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வோம், இதன் மூலம் நம்மிடையேயான சகோதர அன்பை வெளிப்படுத்துவோம்.

# இலக்கிய சூழல்

«"நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்."» (மத்தேயு 4:6)



"சூழல் இல்லாத வாக்கியம் ஒரு சாக்குபோக்கு" என்பது ஒரு பிரபலமான பழமொழி. வேறு விதமாக கூறினால், ஒரு வாக்கியத்தை அதன் சூழலிலிருந்து பிரித்து எடுத்து பயன்படுத்தும்போது, அது நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு தனிப்பட்ட முறையில் பொருள் கொள்ளப்படுவதற்கு வழிவகுக்கலாம்: இத்தகைய புரிதல் பெரும்பாலும் சரியான வேத கற்பித்தல்களிலிருந்து வெகு தொலைவில் இருக்கும்.

வேத வசனத்தின் சூழல் என்பது என்ன?

உடனடி சூழல் என்பது ஒரு பகுதிக்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களை குறிக்கிறது. ஒரு பகுதி இடம் பெற்றுள்ள அத்தியாயம் அதன் விரிவான சூழலாக அமைகிறது. அந்த பகுதி இடம்பெற்றுள்ள முழு புத்தகத்தையும் கருத்தில் கொள்வதன் மூலம் சூழலை இன்னும் விரிவுப்படுத்த முடியும்.



சங்கீதம் 91:11-12 வெளிப்புற ஆபத்துக்களிலிருந்து தேவன் வழங்கும் பாதுகாப்பை குறித்து பேசுகிறது. சாத்தான் இந்த வசனத்தை அதன் சூழலுக்கு புறம்பாகவும் முழுமையற்ற முறையிலும் மேற்கோள் காட்டி, இயேசுவை திட்டமிட்டு ஆபத்தில் சிக்கிக்கொள்ள தூண்ட முயன்றான் (மத் 4:6).



“தவறான கோட்பாடுகளையோ அல்லது கிறிஸ்தவத்திற்கு முரணான நடைமுறைகளையோ நிலைநிறுத்துவதற்காக, சிலர் வேதவசனங்களை அவற்றின் சூழலிலிருந்து பிரித்தெடுத்துப் பயன்படுத்துகின்றனர். ஒரு வசனத்தின் பாதியை மட்டும் மேற்கோள் காட்டி, அதைத் தங்கள் கருத்திற்கு ஆதாரமாகக் காட்ட முயல்கின்றனர்; ஆனால், அந்த வசனத்தின் மீதிப் பகுதியைச் சேர்த்தால், அதன் பொருள் முற்றிலும் வேறாக இருக்கும். பாம்பின் தந்திரத்தோடு, தாங்கள் விரும்பும் உலக இச்சைகளுக்கு ஏற்ப, சூழலுக்குப் பொருந்தாத வசனங்களைச் சாக்காகக் கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். இவ்வாறு பலர் தேவனுடைய வார்த்தையைத் திட்டமிட்டே திரிக்கின்றனர். இன்னும் சிலர், கற்பனை வளம் மிக்கவர்களாக இருப்பதால், வேதத்தில் உள்ள உருவகங்களையும் குறியீடுகளையும் தங்களுக்குத் தோன்றியபடி விளக்குகிறார்கள். வேதம் தன்னைத்தானே விளக்கும் என்ற உண்மையை அவர்கள் கருத்தில் கொள்வதில்லை; மாறாக, தங்கள் சொந்தக் கற்பனைகளை பைபிளின் போதனைகள் என்று முன்வைக்கிறார்கள்.”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆன்மீக போராட்டம், பக். 521)

# வாக்கியத்தின் பொருளை கண்டறிதல்

"அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார்."
(லூக்கா 10:26)





கிறிஸ்தவர்கள் அனைவரும் வேதாகமத்தை தாங்களே புரிந்து கொள்ள வேண்டும். வேதாகமம், மீட்புக்கான வழியை அனைவரும் புரிந்துகொள்ளும் அளவுக்கு தெளிவாகவும் அதே சமயம் மிக சிறந்த அறிவாளிகளுக்கு கூட தொடர்ந்து சவால் அளிக்கும் அளவுக்கு ஆழமானமாகவும் இருக்கிறது. பரிசுத்த வேதாகமம் என்பது மீட்பு குறித்த அறிவின் ஒரு முடிவில்லாத பொக்கிஷம், அதை ஒரு போதும் முழுமையாக அறிந்து விடமுடியாது. ஆனால் வேத வாக்கியத்தின் ஒவ்வொரு சரியான விளக்கமும் சில விதிகளுக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்:

- வசனத்தில் உள்ள சொற்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும் (முடிந்தால், மூல மொழிகளை பயன்படுத்தியோ அல்லது வெவ்வேறு மொழிபெயர்ப்புகளை பயன்படுத்தியோ அவ்வாறு செய்யலாம்)
- வசனத்தின் அனைத்து சூழல்களையும் (வரலாற்று, பண்பாட்டு மற்றும் இலக்கியங்களையும்)
- இணையாக உள்ள பகுதிகள் (நற்செய்தி நூல்கள் போன்றவை), அல்லது ஒரே பொருளை கையாளும் பிற பகுதிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
- இறுதி விளக்கமானது, வேதத்தின் பிற பகுதிகளின் போதனைகளுக்கு இணங்க இருக்க வேண்டும்.

# கருப்பொருள் சார்ந்த வேத ஆய்வு

"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்." (லூக்கா 24:27)



ஒரு கிறிஸ்தவரை பொறுத்தவரை, வேதாகமப் படிப்பு என்பது விருப்பத்திற்க்குரிய ஒன்றல்ல. அது அவசியமான ஒன்றாகும். இறைவனின் சித்தத்தை பற்றிய அறிவில் நாம் எப்போதும் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். அவருடைய வார்த்தையை ஆராயும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்த அனுமதிக்க வேண்டும் (யோவான் 16:13).



மேலும், "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்." (1பேது 3:15).

வேதத்தை பொருண்மை வாரியாக "கருப்பொருள் அடிப்படையில்" படிப்பது, மற்றவர்களுக்கு செய்தியை எடுத்துரைக்க வேத பாடங்களை நடத்துவதன் மூலமோ அல்லது இறைவார்த்தையை பிரசங்கிப்பதன் மூலமோ நமக்கு தேவையான தகுதியை அளிக்கும்.



மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய வேத அறிவை பயன்படுத்திக்கொள்ள, பணிவான மனப்பான்மையை கொண்டிருப்பதும் முக்கியம்.

அதன் முழு உள்ளடக்கமும் நமக்கு தெரியாது என்றாலும், இயேசு இருவரிடமும் பல்வேறு வேதப் பகுதிகளை அடிப்படையாக கொண்டு, தமது மேசியாவிற்குரிய பணி குறித்து வேத பாடம் நடத்தினார் என்பது நமக்கு தெரியும் (லூக்கா. 24:25-27).



“வேதாகமத்தின் சில பகுதிகள் மிகவும் தெளிவாக இருப்பதால், அவற்றை யாரும் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை; ஆனால், மற்ற சில பகுதிகளின் பொருள் மேலோட்டமாகப் பார்த்தவுடன் விளங்கிவிடாது. வேதாகமத்தின் ஒரு பகுதியை மற்றொரு பகுதியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; அதற்கு ஆழ்ந்த ஆய்வும் பொறுமையான சிந்தனையும் தேவை. இத்தகைய ஆய்வுக்குக் கிடைக்கும் பலன் மிகச் சிறந்ததாக இருக்கும். பூமிக்கு அடியில் மறைந்திருக்கும் விலைமதிப்பற்ற உலோகத் தாதுக்களை ஒரு சுரங்கத் தொழிலாளி கண்டெடுப்பது போல, இறைவார்த்தையை மறைந்திருக்கும் புதையலைப் போல விடாமுயற்சியுடன் தேடுபவர், கவனக்குறைவாகத் தேடுபவர்களுக்குத் தென்படாத மிக மதிப்புமிக்க உண்மைகளைக் கண்டடைவார்.”

எலன் ஜி உவைட் (அவர் ஹை காலிங், ஜூலை 18)

# பின்னிணைப்பு: எலன் ஜி உவைட் அவர்களின் எழுத்துக்களை புரிந்துகொள்ளுதல்

எலன் ஜி. வைட் அவர்களின் எழுத்துகளை ஆய்வு செய்யும்போது, விவிலிய உரைகளை ஆய்வு செய்யும்போது கடைப்பிடிக்கும் அதே வழிகாட்டுதல்களை நாமும் பின்பற்ற வேண்டும்.



“மிதிவண்டிகள், உடைகள் மற்றும் பிற தேவையற்ற பொருட்களுக்காகச் செலவிடப்பட்ட பணத்திற்கு கணக்குக் காட்டப்பட வேண்டும்” (TM 398) போன்ற கூற்றுகளை, வரலாற்றுச் சூழலைக் கருத்தில் கொண்டே புரிந்துகொள்ள வேண்டும் (1890-ல் ஒரு மிதிவண்டியின் விலை, பல மாத ஊதியத்திற்குச் சமமாக இருந்தது).




இலக்கியச் சூழலிலிருந்து பிரித்துத் தனித்தனிப் பத்திகளைப் பயன்படுத்துவது, எலன் ஒருபோதும் கூற விரும்பாத ஒன்றைக் கூறுவதாகவோ, அல்லது அவர்கள் நம்பிப் போதித்ததற்கு முரணான ஒரு கோட்பாட்டுக் கருத்தை ஆதரிப்பதாகவோ அமைந்துவிடும்.

ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பாக, ஒரு குறிப்பிட்ட தலைப்பில் அவர் கற்பித்த அனைத்தையும் நாம் ஆராய வேண்டும்; ஒரு சில மேற்கோள்களை மட்டும் நம்பியிருக்கக் கூடாது.

மறுபுறம், நமக்குச் சொல்லப்படுவதை அவர்கள் உண்மையிலேயே எழுதினார்களா என்று நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும். மேற்கோள் உண்மையானது மற்றும் துல்லியமானது என்பதை எப்போதும் சரிபார்க்கவும் (அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பயன்படுத்தவும் https://egwwritings.org/).



EGW WRITINGS®
WHITEESTATE.ORG | ELLENWHITE.ORG